DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 83/2023
Miscellaneous :
Sessions : DW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மாலதி |
| Father / Husband Name | ரமேஷ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.02.2026**

**குறுக்கு விசாரணை:**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவரின் பெயர் என்ன என்றால் ரமேஷ் ஆகும். நாங்கள் எங்கு வசித்து வருகிறார் என்றால் சீனிவாசநல்லூர் ஆகும். என் முகவரி என்னவென்றால் 168/1, குடித்தெரு, மேல் சீனிவாசநல்லூர், திருச்சி மாவட்டம் ஆகும். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை என்னுடையதா என்றால் ஆமாம். நான்எங்கு வங்கி கணக்கு வைத்துள்ளேன் என்றால் IOB தொட்டியம் கிளையில் வைத்துள்ளேன்.என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். மனுதாரர் வழக்கு தொடுப்பதற்கு முன்பு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் மசாஆ 4 refused என்று திருப்பப்பட்டதாக என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் வழக்கு காசோலையை ஜான்சி என்ற நபரிடம் கொடுத்ததாக கூறியுள்ளதால் மேற்படி ஜான்சி எனக்கு என்ன வகை உறவு முறை என்றால் என் கணவரின் அக்கா ஆவார். ஜான்சியின் கணவரின் பெயர் என்னவென்றால் பிரபு ஆகும்.

2. நான் ஜான்சி என்பவரிடம் எப்போது கடன் வாங்கினேன் என்றால் கடந்த 2017 ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நான் எதற்காக மேற்படி கடனை வாங்கினேன் என்றால் காளா ன் பண்ணை வைப்பதற்காக வாங்கினேன். நான் எந்த இடத்தில் காளான் பண்ணை வைத்துள்ளேன் என்றால் சீனிவாச நல்லூரில் வைத்துள்ளேன். மேற்படி பண்ணை இந்நாள் வரை செயல்பட்டு வருகிறதா என்றால் இல்லை. 1 1/2 வருடத்திற்கு முன்பு மூடிவிட்டோம். நான் ஜான்சியிடம் வாங்கிய கடனை எப்போது திருப்பி கொடுத்தேன் என்றால் 2019 ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நான் மேற்படி கடன் தொகையை கொடுத்த பின்னர் வழக்கு காசோலையை திரும்ப கொடுக்க கோரி மேற்படி ஜான்சியிடம் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் தனிப்பட்ட முறையில் கடிதம் ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. மேற்படி காசோலையை குறித்து புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. உண்மையில் ஜான்சியிடம் வழக்கு காசோலை கொடுத்ததாக தேதியிட்டு பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருப்பதால்

நான் மேற்படி காசோலையை கொடுக்க கோரி மேற்படி நபருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றாலும் அவ்வாறு கொடுக்கவில்லை என்பதால் பொய்யாக வழக்கு காசோலை கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு காசோலையை ஜான்சியிடம் கொடுக்கும் போது யார் உடன் இருந்தார்கள் என்றால் எனது உறவினர் சந்திரசேகர் மற்றும் என் கணவர் இருந்தார்.

3. மேற்படி ஜான்சி என்ற நபரை இவ்வழக்கில் விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் எனது காளான் பண்ணை பார்வையிட்டு இருக்கிறார் என்றாலும் மேற்படி காளான் பண்ணைக்காக எனக்கு ரூபாய் 650000 கடன் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. பிரபு என்பவரின் மூலமாகதான் புகார்தாரர் ராஜா எனக்கு பழக்கும் என்றால் சரிதான். (மேற்படி புகார்தாரர் ராஜாவை தெரியும் என்று சொல்லிவிட்டு பின்னர் எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் குறுக்கிட்டதால் சீனிவாசநல்லூர் ராஜாவை தெரியும் என்று சொன்னார்). புகார்தாரர் ராஜா என்னுடைய பண்ணையை பார்த்துள்ளார் என்றாலும் மேற்படி காளான் பண்ணைக்காக எனக்கு ரூபாய் 650000 கடன் கொடுத்துள்ளார் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக மேற்படி புகார்தாரரை தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் ராஜாவிடம் கடனை பெற்று காளான் பண்ணை அமைத்து தொழில் செய்து வருகிறேன் என்றாலும் தற்போது மேற்படி புகார்தாரரை தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சீனிவாச நல்லூர் ராஜா என்பவரிடம் இருந்து கடனை பெற்று மீண்டும் செலுத்தியுள்ளேன். நான் மேற்படி சீனிவாச நல்லூர் ராஜாவை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியும்.

4. பிரபு மற்றும் எனது கணவரை விசாரித்தால் புகார்தாரர் ராஜா எனக்கு தெரிந்தவரா என்பது தெரிய வரும் என்றால் சரிதான். நான் கூறுவது உண்மை என்றால் புகார்தாரர் ராஜாவிடம் இருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வரும்போது அதனை பெற்று அதற்கான முறையான விளக்கத்தை கொடுத்திருப்பேன் என்றாலும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் தவிர்த்து இருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எந்த காணத்திற்காக திருப்பப்பட்டது என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது என்பதை தெரிந்துகொண்டேன். நான் ஜான்சியிடம் பணத்தை ரொக்கமாக கொடுத்துவிட்டேன். புகார்தாரர் ராஜாவிடம் பணத்தை கடனாக பெற்றுக்கொண்டு வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்தே வழக்கு காசோலையை அவருக்கு கொடுத்து காசோலை மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரை ஏமாற்றும் என்ற எண்ணத்தில் வழக்கு காசோலையை கொடுத்துள்ளதால் நான் தண்டிக்கதக்கவர் என்றால் சரியல்ல.